# செல்வமும், சோதனையும்!

மு. அபூ ஆயிஷா அல் சித்திகா, நெல்லை, ஏர்வாடி

செல்வம் என்றாலே இந்த உலகத்தில் இன்பம்தான். ஆனால் அந்த இன்பத்திற்குப் பின்னால் நாம் அறிந்தோ, அறியாமலோ, ஒளிந்து கொண்டு இருக்கும் துன்பமும், வேதனையும் செல்வம் என்ற இன்பத்தால் திரை இடப்பட்டுள்ளது.

செல்வம் என்றாலே சோதனைதானா? அல்லது வேதனையும் தானா? சோதனையும் உண்டு வேதனையும் உண்டு. ஏன்? செல்வம் நாம் சம்பாதிக்கும் இந்த நிலையற்ற உலகில் இன்பத்தைத் தரலாம். ஆனால் மறுமையில் அது நமக்கு வேதனையை தரும் என்பதை செல்வம் படைத்தவர்கள் உணர்வது போல் தெரியவில்லை. அல்லாஹ்வின் அருள் கொண்டு அதிக முயற்சி எடுத்து அதிகமாக தேடுவது, செல்வத்தை சேகரிப்பது தவறு இல்லை. ஆனால் நாம் தேடும் செல்வம் நம்மை பராக்காக்கி விட நாம் அனுமதி அளிக்கக்கூடாது; அனுமதி அளித்தால் நாமே நஷ்டவாளிகள்; அல்லாஹ் கூறுகிறான் :

**“(செல்வத்தையும், மக்களையும்) ஒருவருக் கொருவர் அதிகமாகத் தேடிக்கொள்வது உங்களைப் பராக்காக்கி விட்டது (அது எதுவரை) நீங்கள் மண்ணறைகளை சந்திக்கும் வரை”.** ***அல்குர்ஆன் 102:1,2***

மறதியினால் படைக்கப்பட்ட மனிதன், அல்லாஹ்வை மறந்தவனாக தான் சம்பாதித்தவை, நான் சம்பாதித்தவை என்றும் என் திறமையினால் நான் மேன்மை அடைந்தேன் என்றும் நினைக்கக்கூடியவர்கள ாகவும், சொல்லக் கூடியவர்களாகவும் தான் நாம் இருக்கிறோம். ஆனால் உண்மை நிலை என்ன? நம்மை அல்லாஹ் மேன்மையாக்கினானா? அல்லது நம் திறமையினால் நாம் மேன்மை அடைந்தோமா? என்பதை நாம் உணர வேண்டும், ஆனால் அப்படியாரும் உணர்வதுபோல் தெரியவில்லை, உண்மையில் இவர்களின் திறமை அல்லாஹ்வின்முன் செல்லாகாசுதான். காரணம் அல்லாஹ்தான், தன் திறமையினால் (அருளாள்) செல்வத்தைக் கொடுத்தான். தன்னைப்படைத்த அல்லாஹு ரப்புல் ஆலமீனை மறந்து பேசும் மனிதன் நிச்சயம் நன்றி கெட்டவன்தான்.

ஆனால் எவராவது மறுப்பானானால், ஒன்று கடவுள் நம்பிக்கை இல்லாத நாஸ்திகனாக இருக்க வேண்டும்; அல்லது கடவுள் நம்பிக்கை உள்ள இணை வைப்பவராகவோ அல்லாஹ்வின் வல்லமையில் சந்தேகம் உள்ள சிலை வணங்கிகளாகவோ இருப்பதில் நமக்கு வருத்தம் இல்லை. முஸ்லிம் என்று தன்னை சொல்லிக்கொண் டு முஸ்லிம் பெயர் தாங்கிகள் சொல்வதில்தான் நமக்கு வருத்தமாக உள்ளது. நம்மை படைத்த அல்லாஹு ரப்பில் ஆலமீன் அல்லவா நம்மை இயக்கி கொண்டு இருக்கிறான். நாம் ஒன்றும் இல்லாமல் இருந்தபோது அவன் அல்லவா நம்மை உருவாக்கி மனிதனாக ஆக்கி, நமக்கு செல்வத்தையும், செல்வச் செழிப்பையும் தந்தான் என்பதை கூட மறந்தவனாக இந்த நன்றிகெட்ட மனிதன், விசுவாசி? விசுவாசம் இல்லாதவனாக இருக்கிறான்!

ஆனால் ஒரு நாள் தான் சம்பாதித்தவை, நான் சம்பாதித்தவை என்றும், என் திறமையினால், என்றும் சொல்லிக்கொண்டு இருந்தோமே அதற்கும், வருங்காலத்தில் நம் வருமானத்திற்கும், வருமானத்தை

பெருக்குவதற்கும் என்ன, என்ன, திட்டங்களை எல்லாம் முன் கூட்டியே, மனக்கோட்டை கட்டிக்கொண்டு இருந்தோமோ அதற்கு முற்றுப்புள்ளியான (மவ்த்து) மரணம் வந்து விட்டால் அவனுடைய செல்வம் அவனை துரத்தி விட்டு, அவனது வீடுகளிம், வயல்வெளிகளிம், வாடகை தரும் கட்டிடங்களிம் ஒழிந்து கொள்ளும். தன் திறமையினால் சொத்தை சேர்த்த மனிதனோ தன்னந்தனியாக, மண்கோட்டைக்குள் அதுவும் மண்ணோடு மண்ணாக மக்கிப்போய் விடுவான். அல்லாஹ் அவனை எழுப்பும் காலம்வரை. மண்ணறைகளை சந்தித்த பின் அல்லாஹ் கூறுகிறான் :

**“(உண்மை நிலை) அவ்வாறல்ல! (அதன் விளைவை) அடுத்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்; பின்னர், அவ்வாறல்ல! (அதன் விளைவை) அடுத்து நீங்கள் அறிந்து கொள்வீர்கள்”.** ***அல்குர்ஆன் 102:3,4***

நான் சம்பாதித்தவை, நான் சம்பாதித்தவை என்று உலகில் சொல்லித் திரிந்த மனிதன் அதில் இருந்து அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்யாத அவனின் நிலை பற்றி அறிந்து கொள்வான். எப்படி அறிந்து கொள்வான்?

**“(உண்மை நிலை) அவ்வாறல்ல! (எதன்பால் உங்கள் முடிவிருக்குமோ அதுபற்றி) நீங்கள் உறுதியான அறிவாக அறிவீர்களாயின் (நீங்கள் ஈடுபட்டிருக்கும் பயனற்ற செயல் உங்களைப் பராக்காக்கி இருக்காது)”.** ***அல்குர்ஆன் 102:5***

இந்த நிலையற்ற உலகில் நான் சம்பாதித்தவை, நான் சம்பாதித்தவை என்று சொல்லிக்கொண்டு அல்லாஹ்வுடைய பாதையில் செலவு செய்யாத மனிதனின் நிலையோ, மறுமையில் எந்த பயனையும் தராது; மாறாக அவன் சேமித்து வைத்தவை எல்லாம் அவனுக்கு வேதனையைத்தான் தரும்.

**“.... இன்னும் எவர்கள் பொன்னையும், வெள்ளியையும், சேமித்து வைத்துக்கொண்டு அவற்றை அல்லாஹ்வின் பாதையில் செலவிடாதிருக்கின்றார்களோ; (நபியே!) அவர்களுக்கு நோவினை செய்யும் வேதனை உண்டு என்று நன்மாராயம் கூறுவீராக!”.** ***அல்குர்ஆன் 9:34***

நாம் இந்த உலகில் சேகரித்து வைத்து இருக்கும், செல்வம் நாளை இன்ஷா அல்லாஹ் மறுமையில் நமக்கு பயன் தரும் வகையில், அல்லாஹ்வும், அல்லாஹ்வுடைய தூதர் நபி(ஸல்) அவர்களும் காட்டிய வழியில் செலவு செய்தால், மறுமையில் அல்லாஹ்வுடைய சோதனையில் இருந்தும் வேதனையில் இருந்தும் நாம் தப்பித்துக்கொள்வோம். எவ்வளவுதான் தன்னிடம் செல்வம் இருந்தாம் அவன் உண்டு கழித்தது, உடுத்திக் கிழித்தது, போக மறுமைக்காக நாம் என்ன சேமித்தோம்? என்பதை பணம் கொழிக்கும் செல்வந்தர்கள் சிந்திக்க வேண்டும், தன்னிடம் பணிபுரியும் தொழிலாளி விஷயத்தில், நல்லபடியாக நடக்கவும் வேண்டும்.

கடுமையாக உழைக்கத் தயங்காதீர்கள்; பணியாட்களையும் உழைக்கப் பழக்கப்படுத்துங்கள். அதே வேளை, பணியாட்களின் விஷயத்தில் தாராள மனப்பான்மையுடன் நடந்து கொள்ளுங்கள்! அவர்களிடம் மென்மையான அணுகு முறையைக் கடைபிடியுங்கள். சிறு சிறு விஷயங்களுக்கெல்லாம் அவர்கள்மீது எரிந்து விழாதீர்கள். அவர்கள் விஷயத்தில் அநாவசியமான சந்தேகங்களை விட்டொழியுங்கள்.

நபி(ஸல்) அவர்கள் கூறினார்கள் : **“எந்த சமுதாயம் பலவீனமான மக்களுக்கு அவர்களின் உரிமையை தர மறுக்கிறதோ, அல்லாஹ் அத்தகையோரை தூய்மைப் படுத்துவதில்லை!”**

நபி(ஸல்) அவர்கள் மீண்டும் கூறுகிறார்கள் : **“எவர் வணிக நடவடிக்கைகளில் மென்மையையும், நல்லொழுக்கத்தையும் பேணி வருகின்றாரோ, அத்தகையவர்மீது அல்லாஹ் கருணை காட்டுவான்”.** *நூல் : புகாரீ*

இப்போது புதியதாக கிளம்பி இருக்கும் புயல், ஜகாத் வருடா வருடமா? ஆயுளில் ஒரு முறையா? இது பற்றிய தெளிவான, சரியான குர்ஆன், ஹதீஸ் அடிப்படையான விளக்கத்தை அந்நஜாத் ஆசிரியர் அவர்கள் அக்டோபர் 2005, அந்நஜாத் இதழில் எழுதி இருந்தார்கள். அதை முழுமையாக படிக்காத சில சகோதரர்கள் அபூ அப்தில்லாஹ்வுக்கு, தவ்ஹீத் மவ்லவிகளைப் பிடிக்காத காரணத்தால் அபூ அப்தில்லாஹ் தன்னுடைய சொந்த கருத்தைதான் எழுதி உள்ளார் என்று சொல்கிறார்கள். அந்நஜாத் இதழில் அபூ அப்தில்லாஹ் அவர்களுக்கு தனது சொந்த கருத்தை எழுதுவதற்கு, அல்லாஹ்வுடனும், அல்லாஹ்வுடைய தூதர் நபி(ஸல்) அவர்களுடனும் மோதுவதற்கு என்ன சக்தி இருக்கிறது. அப்படி மோதினால் அபூ அப்தில்லாஹ் அவர்களின் நிலை என்ன? என்பதை எல்லாம் குர்ஆன், ஹதீஸ் பேசும் சகோதரர்கள் சிந்திக்க வேண்டும்.

இப்படிப்பட்ட சகோதரர்களை குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் சிந்திக்கவிடாமல் தடுப்பது புரோகித இனமே; புரோகித முல்லாக்கள் பின்னால் இவர்கள் செல்ம் காலமெல்லாம் இவர்கள் வழிகேட்டில்தான் இருப்பார்கள் என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. இஸ்லாமிய மார்க்கத்தில் உள்ள எந்த பிரச்சினையாக இருந்தாம் (ஜகாத் உள்பட) குர்ஆன், ஹதீஸுடன் உரசி பார்க்கவே அந்நஜாத் தொடர்ந்து எழுதுகிறது. குர்ஆன், ஹதீஸை விட்டு, விட்டு அந்நஜாத்தை பின்பற்றுங்கள் என்று அந்நஜாத் ஒரு போதும் எழுதாது என்பதை குர்ஆன், ஹதீஸ் பேசும் சகோதரர்கள் புரிந்து கொண்டு, அந்நஜாத்தையும் மற்ற இஸ்லாமிய இதழ்களையும் படியுங்கள், சிந்தியுங்கள்.

புரோகிதர்கள் பின்னால் செல்வதை தவிர்த்து விட்டு அல்லாஹ்வும், அல்லாஹ்வுடைய தூதர் நபி(ஸல்) அவர்களையும் பற்றி பிடித்துக் கொண்டு வெற்றியாளர்களாக மாறுவோம். குர்ஆன், ஹதீஸ் மட்டும்தான் மார்க்கம் என்று சொல்ம் எந்த அறிஞராக இருந்தாம் குர்ஆன், ஹதீஸ் அடிப்படையில் சொல்ம் கருத்துக்களையும், குர்ஆன், ஹதீஸுடன் உரசி பார்த்து ஏற்றுக் கொள்வோம். 1426 வருடங்களாக எந்த குழப்பமும் இல்லாமல் வருடா, வருடம் ஜகாத் கொடுத்து ஆகவேண்டும் என்ற நிலையை மாற்றுவதற்கு எந்த தவ்ஹீத் புரோகிதருக்கும் எந்த அதிகாரமும் இல்லை.

அல்லாஹ் நமக்கு தந்த செல்வதிலிருந்து, ஏழைகளுக்கு கொடுப்பதில், இன்பம் காணுங்கள் செல்வந்தர்களே, அல்லாஹ் தந்த செல்வத்திலிருந்து நீங்கள் கொடுக்க மறுத்து அல்லாஹ்வுக்கு மாறு செய்வீர்களானால், மறுமையில் நமது துன்பமும், வேதனையும் நம்மை சூழ்ந்து கொள்ளும்.

**“(நபியே! அவர்களுக்கு நீர் அந்த நாளை நினைவூட்டுவீராக) அந்த நாளில் (அவர்கள் சேமித்து வைத்த செல்வத்தை) நரக நெருப்பிலிட்டுக் காய்ச்சி, அதைக்கொண்டு அவர்களுடைய நெற்றிகளிம், விலாப் புறங்களிம், முதுகுகளிம் சூடு போடப்படும்; (இன்னும்) இதுதான் நீங்கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தது; நீங்கள் உங்களுக்காகச் சேமித்து வைத்தது. ஆகவே நீங்கள் சேமித்து வைத்ததைச் சுவைத்துப் பாருங்கள் (என்று கூறப்படும்)”.** ***அல்குர்ஆன் 9:35***

செல்வமே சோதனைதான் என்பதை அறிந்து, ஏழைகளுக்கும் கஷ்டப்படுகிறவர்களுக்கும் அல்லாஹ்வுக்காக

கொடுத்து உதவுங்கள்; அப்படிக் கொடுப்பதன் மூலம் மனமகிழ்ச்சியும், இன்பமும் அடையுங்கள். இன்ஷா அல்லாஹ் உங்களையும், நம் எல்லோரையும் அல்லாஹ் மறுமையில் இன்பமடைய செய்வான் என்பதில் சந்தேகமே இல்லை. மறுமை இன்பம், நிலையானது என்பதை மனதில் வைத்து வருடா, வருடம் ஜகாத்தையும் தொடர்ந்து (ஸதக்கா) தர்மத்தையும் கொடுங்கள்; வெற்றியும் பெறுங்கள்.

அல்லாஹ் தந்த செல்வத்தை, அல்லாஹ்வின் பாதையில் செலவு செய்ய மறுப்பதற்கு உங்களுக்கும், நமக்கும் எந்த அதிகாரமும் இல்லை. சகல அதிகாரமும் உள்ள ரப்புல் ஆலமீன் அவன் தன் குர்ஆனில் சொன்ன பிரகாரம், மறுமையில் பெரும் குற்றவாளிகளாக இல்லாமல், அவன் பொருந்திக் கொள்ளும் மனிதனாக, உண்மை முஸ்லிமாக வாழ அல்லாஹ் கிருபை செய்வான். மீண்டும் அல்லாஹ்வின் எச்சரிக்கை :

**“(அல்லாஹ்வின்மீது சத்தியமாக மறுமையில்) நிச்சயமாக நீங்கள் நரகத்தை (வெகு தூரத்திலிருந்து) பார்ப்பீர்கள். பின்னர், நீங்கள் அதை கண்ணுக்கெதிரில் (வெகு அருகில்) பார்ப்பீர்கள். பின்னர், அந்த நாளில் (உலகில் நீங்கள் அனுபவித்து வந்த அனைத்து) அருள் கொடையைப்பற்றி நிச்சயமாக நீங்கள் கேட்கப்படுவீர்கள்”.** ***அல்குர்ஆன் 102:6,7,8***

அல்லாஹ் தந்த அருள் கொடைகளைப் பற்றி நிச்சயம் நாம் கேட்கப்படுவோம் என்பதை மனதில் வைத்து, அல்லாஹ் தந்த செல்வத்தை அல்லாஹ் சொன்ன பிரகாரம் செலவு செய்து அல்லாஹ்வுக்கும், அல்லாஹ்வுடைய தூதர் நபி(ஸல்) அவர்களுக்கும் கட்டுப்பட்ட முஸ்லிமாக வாழ நம் எல்லோருக்கும் அல்லாஹ் அருள் பலிப்பானாக ஆமீன்.

டிசம்பர் 2005 அந்நஜாத்